# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,

# FAST TRACK COURT, ARANI.

## S.C.No.89/2018

**Deposition of Witness for :** **P.W.7**

**Name :** திரு.முருகன்

**Father's Name :**

**Village :**

**Taluk :**

**Caste :**

**Calling :**

**Religion :**

**Age :**

எதிரிகள் 2 முதல் 4 ஆஜர். 1ஆம் எதிரி இறந்துவிட்டார்.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 16.10.2023.**

முதல் விசாரணை -

நான் வடகல்பாக்கத்தில் குடியிருக்கிறேன். நான் பஞ்சாயத்து கிளார்க்காக பணிபுரிந்து வருகிறேன். பத்து வருடம் முன்பு தேதி மாதம் ஞாபகம் இல்லை. மணியக்காரர் உடன் ஒரு பிரேதத்தை பார்க்க வடகல்பாக்கத்தில் பச்சையம்மன் கோயிலுக்கு அருகில் சென்றோம். நான் அருகில் சென்று பார்க்கவில்லை. எப்படி இருந்தது என்று எனக்கு எதுவும் தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சி விசாரணை வாக்குமூலத்திற்கு எதிராக சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்படுகிறது.

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

என்னை போலிசார் விசாரித்தபோது சோதியம்பாக்கம் செல்லும் பாதையில் பச்சையப்பன் நிலத்திற்கு அருகில் ஒரு பிரேதம் இருந்ததையும், அதை நான் பார்த்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரித்தபோது வாக்குமூலத்தில் உள்ளவாறு வாக்குமூலம் அளித்துவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் எதிரிகளை எனக்கு தெரியாது.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இறந்தவர் எப்படி இறந்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரி தான். இவ்வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரி தான். போலிசாரும் என்னை விசாரிக்கவில்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-.K.Vijaya.

Additional Sessions Judge,

Arani.